DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE)
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | | | |
|---|---|---|---|
| Name | சுப்பிரமணி | Village | வாணியம்பாடி |
| Father's Name | முனிரத்தினம் | Taluk | வாணியம்பாடி |
| Age | 78 | Calling | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **09.07.2026**

**O.S. No. 120/2018** **வா.சா.1** **03.21 PM – 03.51 PM**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி –**

1. பிரதிவாதி பிரபாவதி ஆக்கிரமித்த சொத்திற்கான செக்குபந்தி விவரத்தை நான் இந்த வழக்கில் கூறவில்லை என்று சொன்னால் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள் எப்படி சொல்ல முடியும் என சாட்சி பதில் அளிக்கிறார். சாட்சியிடம் வாணியம்பாடி சார்பு நீதிமன்றத்தில் பிரபாவதி தாக்கல் செய்திருந்த வழக்கில் தீர்ப்பு மற்றும் தீப்பாணை சான்றளிக்கப்பட்ட நகல்கள் இது தானா என்றால் ஆமாம். **(மேற்படி வாணியம்பாடி சார்பு நீதிமன்றத்தில் பிரபாவதி தாக்கல் செய்திருந்த வழக்கில் தீர்ப்பு மற்றும் தீப்பாணை சான்றளிக்கப்பட்ட நகல்கள் பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 முறையே ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்ட பிரபாவதியின் சொத்தில் நான் உரிமை எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். பிரபாவதியின் சொத்து சர்வே எண்.35/2 என்றால் சரிதான். சர்வே எண்.35/3 ற்கான ஆதாரமாக பத்திரம் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல தாக்கல் செய்திருக்கிறேன். வா.சா.ஆ.9 ஆன பத்திரம் நகல்தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் அதனுடைய அசல் பத்திரம் என்னிடம் இல்லை என்றால் ஆமாம்.

3. எந்தப் பத்திரத்தின் அடிப்படையில் அம்பிகா என்பவருக்கு மேற்படி வா.சா.ஆ.9 பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் என்னுடைய மாமியார் சரஸ்வதி அம்மாளுடைய சொத்து அவருக்கு மூன்று பிள்ளைகள் சண்முகம், மகாதேவன் மற்றும் அம்பிகா வாரிசு ஆவார்கள், சரஸ்வதி அம்மாள் இறந்த பிறகு அம்பிகாவின் சகோதரர்கள் அவருக்கு எழுதி கொடுத்து விட்டார்கள்.

4. மேற்படி சரஸ்வதி அம்மாள் என்பவரின் பெயரில் உள்ள பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த பத்திரத்தை பார்த்தால் தான் சரஸ்வதி அம்மாளுக்கு எந்த சொத்து எந்த சர்வே எண்ணில்

பாத்தியப்பட்டது என்பது தெரிய வரும் என்று சொன்னால் சரிதான். பிரபாவதியின் தாயார் வேதம்மாள் என்பவர் கடந்த 40 ஆண்டுகளாக வழக்கு சொத்தில் இருக்கிறார் என்று சொன்னால் அவருடைய பாக சொத்தில் அவர் இருக்கிறார் வழக்கு சொத்தில் இல்லை.

5. உயில் எழுதி எத்தனை வருடமாகிறது என்று சொன்னால் சுமார் 40 ஆண்டுகள் ஆகிறது. யார் உயில் எழுதினார் என்றால் முருகேச முதலியார் எழுதினார். யாருக்கு எழுதி வைக்கப்பட்டது என்றால் சரஸ்வதி அம்மாள் மற்றும் வேதம்மாள் ஆகிய இரண்டு பெண் குழந்தைகளுக்கு எழுதி வைத்தார். சர்வே எண்.35/3 ல் பிரபாவதி எத்தனை வருடமாக சுவாதீனத்தில் இருக்கிறார் என்றால் சுமார் ஆறு முதல் ஏழு வருடங்களாக இருக்கிறார். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எத்தனை காலமாக இருக்கிறார் என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு ஐந்து முதல் ஆறு மாதங்களாக இருக்கிறார். 5, 6 மாதங்களாக வழக்கு சொத்தில் பிரபாவதி இருக்கிறார் என்பதற்கு வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

6. வழக்குரையில் எவ்வளவு நாட்களாக பிரதிவாதி அங்கு இருக்கிறார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கிற்காக நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 6, 7 மாதங்களாக அவர் இருக்கிறார் என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் பார்வையிடும் போது நான் உடன் இருந்தேனா என்றால் இருந்தேன்.

7. 35/3–ல் உள்ள சர்வே எண்ணில் கிழக்கு மேற்காக மற்றும் வடக்கு தெற்காக எவ்வளவு நீளம் இருக்கிறது என்று சொன்னால் தெரியாது. 35/2 மற்றும் 35/3 உள்ள சர்வே எண்கள் சுமார் 40 வருடமாக எனக்கு தெரியும் என்றால் சரிதான். பிரபாவதி சொத்திற்கும் எனது சொத்திற்கும் இடையே வரப்பு உள்ளது என்றால் சரிதான் கிழக்கு மேற்காக உள்ளது. அந்த வரப்பு எனக்கு தெரிந்து 40 வருடமாக இருக்கிறது என்றால் சரியல்ல, அவர்கள் வந்த பிறகு ஏர் ஓட்டி ஓட்டி வரப்பு மாறிவிட்டது. 40 வருடமாக வரப்பு இருந்தது என்றாலும் அது எங்கு அமைந்துள்ளது என்னாலும் கூற முடியாது பிரதிவாதியாலும் கூற முடியாது என்று சொன்னால் சாட்சியதற்கு பிரபாவதி வாங்கிய பின் தட்டி தட்டி வரப்பை மாற்றி விட்டார் என பதில் கூறுகிறார்.

8. நீதிமன்ற ஆணையர் வருவதற்கு முன்பும் அவ்வாறு தள்ளி தள்ளி மாற்றிவிட்டார் என்று சொன்னால் ஆமாம். அவ்வாறு மாற்றப்பட்ட வரப்பை தான் நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டார் என்றால் ஆமாம். பிரபாவதி சொத்தில் 4 தென்னை மரங்கள் உள்ளது என நீதிமன்ற ஆணையர் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான், அவர் ஆக்கிரமிப்பு செய்த சொத்தில் வருகிறது என சாட்சி கூறுகிறார். தென்னை மரங்களுக்கு வயது சுமார் 30

முதல் 35 வருடங்கள் இருக்கும் என்றால் சரியல்ல சுமார் 20 வருடம் இருக்கும்.

9. நீதிமன்ற ஆணையரின் அறிக்கைக்கு ஆட்சியபனை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்யப்பட்டுள்ளது, நீதிமன்ற ஆணையரின் அறிக்கை தப்பு என தாக்கல் செய்துள்ளேன். அப்படி என்றால் நீதிமன்ற ஆணையர் சரியான முறையில் அளக்கவில்லை என கூறுகிறேனா என்றால் ஆமாம். அவர் தாக்கல் செய்த அறிக்கையும் மற்றும் அளவுகளும் தவறு என்று கூறுகிறேனா என்றால் ஆமாம். இன்றைய தேதி வரையில் வேறொரு நீதிமன்ற ஆணையரை நியமிக்க மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

10. பிரபாவதி சுவாதீனத்தில் தான் வழக்கு சொத்து உள்ளது என்றாலும் எனக்கும் அந்த சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வேதம்மாள் காலத்திலிருந்தே பிரதிவாதி அனுபவத்தில் வரும் சொத்து இருக்கு நானோ என்னுடைய மனைவியோ எதுவும் ஆட்சியபனை தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்குரையில் வழக்கு சொத்தின் செக்குபந்தி விவரம் குறிப்பிடாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியில்லை. கால தோஷத்தால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

***குறுக்கு விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.***

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாணியம்பாடி.